அரசாங்க நிருவாகச் சுற்றறிவிப்பு நிருப இல. 191

எனது இல. 140 எல் 104 ரி.
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1981, யூன் மாதம் 19 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

<u>அரசாங்க வண்டிகளைப் பேணலும் பராமரித்தலும்.</u>

அரசாங்க வண்டிகளைத் தக்கவாறு பேணுவதற்கும் பராமரிப்பதற்கும் வேண்டியவையான பயனுறு ஒழுங்குகள் இல்லாதிருப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் பெரிதும் விசனமுறுகின்றாரென்பதைத் தங்களுக்கறிவிக்குமாறு நான் பணிக்கப்பெற்றுள்ளேன்.



02. சாய்ச்சி வடித்தநீர், எஞ்சின் எண்ணெய், நீர் மூலம் எஞ்சினைக் குளிர்விக்கும் சாதனத்திற்கு (ரேடியேற்றர்) வேண்டிய நீர் என்பனவற்றை அளித்தல் போன்ற அடிப்படையான எளிய தேவைப்பாடுகள் கூடக் கவனிக்கப்படுவதில்லையென்பதும் அதனால் அவ்வண்டிகள் கடுமையாகக் கேடுறுகின்றனவென்பதும் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

03. ஆகவே, அரசாங்க வண்டிகள் தகுந்த முறையில் கவனிக்கப்பெற்றுப் பராமரிக்கப்படுகின்றனவென்பதை இயன்றவரையில் தாமே நேரடியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனத் திணைக்களத் தலைவர்கள், பகுதித் தலைவர்கள், உப அலுவலகத் தலைவர்கள், போக்குவரத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் முதலியோர்க்கு உடனடியாக நெறிப்படுத்துகைகளை வழங்குமாறு தங்களை வேண்டும்படி நான் பணிக்கப்பெற்றுள்ளேன்.

04. செயல்முறையிற் சாத்தியமானவிடத்தெல்லாம் குறிப்பிட்டவொரு வண்டிக்குப் பொறுப்பாகக் குறிப்பிட்டவொரு சாரதியைச் சாட்டிவிடுதல் இந் நோக்கினையடையப் பெரிதும் உதவுமெனக் கருதப்படுகின்றது.

05. உங்கள் அமைச்சின் கீழ் வரும் அரசாங்க யாக்கங்களின் தலைவர்களுக்கும் இதே போன்ற நெறிப்படுத்துகைகளை விடுக்குமாறு தங்களை வேண்டும்படியும் நான் பணிக்கப்பெற்றுள்ளேன்.

ஒப்பமிட்டவர் டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.